(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **188/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **PW3** | Prosecution /Defence / Court | |
| Name | **Nallasivam** | Caste | |
| Father's Name | **Ponnusamy** | Calling | |
| Village | **Thoppupalayam** | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

27.01.2020

<u>முதல் விசாரணை</u>

நான் ஈரோடு ரோட்டில் முருகன் தியேட்டர் எதிரில் உள்ள மணி உணவகத்தில் சப்ளையராக உள்ளேன். கடந்த 14.11.2009 தேதியில் நான் பணியில் இருந்தபோது நான் வேலை செய்த உணவகத்தின் உரிமையாளர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சொந்தமான கம்பிகள் அங்குவேலை நடந்து கொண்டிருந்ததால் வைக்கப்பட்டிருந்தன. அது காணாமல் போயிருந்தது. அது குறித்து உரிமையாளர் புகார் கொடுத்திருந்ததாக கேள்விப்பட்டோம். அன்று காலை சுமார் 6.45 மணயளவிற்கு நான் பணியில் இருந்தபோது பெருந்துறை காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து எங்கள் முன்னிலையில் மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அதில் நானும் செல்வம் என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 .** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

***<u>3 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.,</u>***

எனது சொந்த ஊர் தோப்புபாளையம் ஆகும். நான் கடந்த 10 வருடங்களாக மேற்சொன்ன உணவகத்தில்தான் வேலை செய்துவருகிறேன். என்னுடைய

பணிநேரம் காலை 6 மணி முதல் மதியம் 3 மணி வரை. பின்னர் இரவு 8 மணி முதல் 12 மணிவரை ஆகும். சம்பவ இடமானது உணவகத்திலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி உள்ளதென்றால் ஒட்டி உள்ளது. சம்பவ இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கான வேறு பொருட்களாக செங்கல் , மணல் , ஜல்லி ஆகியவை இருந்தன என்றால் சரிதான். அ.சா.1 அன்று எப்பொழுதும் போல் காலை 6 மணியளவில் கடைக்கு வந்து கல்லாவில் அமர்ந்திருந்தார் என்றால் சரிதான். எப்பொழுது திருட்டு போனதாக தெரியவந்ததென்றால் முதலில் அ.சா.1 தான் காலை 6 மணியளவில் சென்றுபார்த்தபோது தெரியவந்தது. மேற்படி காணாமல் போன கம்பிகள் எந்த நிறுவனத்தை சேர்ந்தது என்று தெரியாது எப்பொழுது இறக்கப்பட்டது என்ற விவரமும் தெரியாது. அ.சா.1 சொல்லிதான் முதலில் திருட்டு போன விவரம் எனக்கு தெரியும். 6 மணிக்கு காணாமல் போனதாக தெரியவந்தது. 10 நிமிடத்தில் காவல்துறையினர் அங்கு வந்துவிட்டார்கள். சம்பவ இடத்திலிருந்த செங்கல் , மணல் , ஜல்லி ஆகியவற்றை காவல்துறையினர் குறித்துக்கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வரைபடத்தில் வரைந்தார்களா என்றால் தெரியாது. அ.சா.1 கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையெழுத்திட்டேன் என்றால் தெரியாது. பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.